யா/ அருணோதயக்கல்லூரி

அளவெட்டி

நிறுவுநர் நினைவு தினமும்

பரிசளிப்பு விழாவும் - 2014

# நினைவுப்பேருரை

# பாடசாலை ஒன்றின் வளர்ச்சியில் பங்கு கொள்ளும் காரணிகள்

திரு.பொ.சுந்தரலிங்கம்

ஓய்வுநிலை அதிபர்

யா/மகாஜனக்கல்லூரி

தெல்லிப்பழை

# பாடசாலை ஒன்றின் வளர்ச்சியில் பங்குகொள்ளும் காரணிகள்

பாடசாலையின் வளர்ச்சி எனும்போது

1. கல்வி 2. பௌதிகவளம் ஆகியவற்றின் வளர்ச்சியைக் குறிக்கிறது. கல்வி வளர்ச்சி என்பது மாணவரது அறிவு, திறன், மனப்பாங்கு ஆகியவற்றின் வளர்ச்சியைக் குறிக்கிறது. பௌதிகவளம் எனும் போது கட்டட வசதிகள், ஆய்வுகூட வசதிகள், மைதான வசதிகள், மின்சார வசதிகள், குடிநீர்வசதிகள், கழிப்பறை வசதிகள் போன்ற பலவற்றை குறிக்கும்.

1960 இல் அரசாங்கம் நாட்டில் உள்ள பெரும்பாலான பாடசாலைகளைப் பொறுப்பேற்றதன் காரணமாக அரச பாடசாலைகள், தனியார் பாடசாலைகள் என இருவகை பாடசாலைகள் இயங்கி வருகின்றன. அரசு பாடசாலைகளைப் பொறுப்பேற்றபின் பாடசாலைகள் வகைப்படுத்தப்பட்டன.

1. க.பொ.த (உ/த) கலை, வர்த்தகம், கணித, விஞ்ஞான பிரிவுகளைக் கொண்ட பாடசாலைகள் (1AB)
2. க.பொ.த (உ/த) கலை, வர்த்தக பிரிவுகளைக் கொண்ட பாடசாலைகள் (1C)
3. க.பொ.த (சா/த) வரை கொண்டுள்ள பாடசாலைகள்
4. தரம் 1 - 8 வரை வகுப்புக்களைக் கொண்டுள்ள பாடசாலைகள்
5. தரம் 1 - 5 வரை வகுப்புக்களைக் கொண்டுள்ள பாடசாலைகள் (ஆரம்பப்பிரிவு பாடசாலைகள்)

மேலும் இப்பாடசாலைகள் வசதி கூடிய பாடசாலைகள், வசதி குறைந்த பாடசாலைகள் என வகைப்படுத்தப்பட்டன.

இப்பாடசாலைகள் தற்போது,

1. தேசிய பாடசாலைகள்
2. நவோதய பாடசாலைகள்
3. 1000 பாடசாலை திட்ட பாடசாலைகள் என மேலும் வகைப்படுத்தப்படுகின்றன.

பல்வேறு வகைப்படுத்தப்பட்ட பாடசாலைகளின் பௌதிக வளங்களை நேரடி பார்வையின் மூலம் அறியலாம். பல்வேறு மட்ட

பொதுப்பரீட்சைப் பெறுபேறுகள் மூலம் அறிவு வளர்ச்சியையும் இணைப்பாடவிதான போட்டிகளில் பெறும் வெற்றிகள் மூலம் திறன் வளர்ச்சியையும் சமூகத்தில் நடைபெறும் சம்பவங்கள் மூலம் மனப்பாங்கு வளர்ச்சியையும் அறியலாம்.

ஒவ்வொரு பாடசாலையும் தமது மாணவர்கள் பொதுப்பரீட்சைகளில் பெறும் சிறந்த பெறுபேறுகளையும் இணைபாடவிதான செயற்பாட்டுப் போட்டிகளில் பெறும் வெற்றிகளையும் கருத்தில் கொண்டு கல்லூரியின் வளர்ச்சி பற்றி பெருமிதமடைகின்றன. சமூகமும் ஏற்றுக்கொள்கிறது. ஆனால் எந்தவொரு பாடசாலையும் மாணவர்கள் மனப்பாங்கு வளர்ச்சி பற்றி கருத்தில் கொள்வது குறைவு. உண்மையில் முன்னைய காலங்களுடன் ஒப்பிடும்போது தற்சமயம் மாணவரின் மனப்பாங்கில் வளர்ச்சி ஏற்படவில்லை. வீழ்ச்சிதான் ஏற்பட்டுள்ளது என்று கருதக்கூடியதாக உள்ளது.

மனப்பாங்கு வளர்ச்சி அடைந்திருந்தால் தற்போது சமூகத்தில் நடைபெறும் கொலை, கொள்ளை, களவு, கற்பழிப்பு, குழுநிலை மோதல்கள், வாள்வெட்டுச் சம்பவங்கள், சிறுவர் துஷ்பிரயோகம், போதைவஸ்து பாவனை போன்றவை நடைபெறுமா? எனவே மாணவர்களில் மனப்பாங்கு வளர்ச்சி பற்றி அனைவரும் கூடிய கவனம் செலுத்த வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது.

மனப்பாங்கு வளர்ச்சியில் கூடிய கவனம் செலுத்தாவிட்டால் குறுகிய காலத்தில் எமது சமுதாயம் ஒரு பின்தங்கிய சமுதாயமாகி விடும். ஒரு பாடசாலையின் வளர்ச்சியில் ஒன்றுடன் ஒன்று இணைந்த பல்வேறு காரணிகள் பங்கு கொள்கின்றன.

**பங்கு கொள்ளும் காரணிகள் சில:-**

1. அதிபர்
2. ஆசிரியர்கள்
3. பெற்றோர்
4. மாணவர்கள்
5. கல்விசாரா ஊழியர்கள்
6. பழைய மாணவர்கள்
7. நலன்விரும்பிகள்
8. கல்விச்சமூகம்
9. கல்வி அமைச்சு, கல்வித்திணைக்களம்
10. ஆசிரிய சங்கங்கள்
11. அரசியல்வாதிகள்

## 1. அதிபர்

பாடசாலையின் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிப்பவர் அதிபராவர். அதிபரானவர் நல்லொழுக்கம் உடையவராகவும், கலாசார விழுமியங்களைப் பேணி நடப்பவராகவும் இருக்க வேண்டும். உயர்கல்வித்தகைமை உடையவராகவும், சிறந்த பாட ஆசிரியராகவும் இருக்க வேண்டும். தானும், தொடர்ந்து கற்று தனது கல்வித் தகைமையை வளர்த்துக் கொள்பவராக இருக்க வேண்டும். இன்றைய காலகட்டத்தில் கூடிய நிர்வாக பொறுப்புக்கள் திடீர் திடீரென அடிக்கடி மேலிட அழைப்புகள், பல்வேறு தரவுகளை நாளுக்கு நாள் அனுப்பி வைக்க வேண்டிய சூழ்நிலை போன்ற பல்வேறு காரணிகளால் அதிபர்கள் வகுப்பறைக் கற்பித்தலில் ஈடுபட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அதிபரானவர் மாணவர்களும், ஆசிரியர்களும் பாடசா லைக்கு வருவதற்கு முன்னரே தான் வந்து அவர்கள் வரும்போது இன்முகத்துடன் வரவேற்கத்தக்கவராக இருத்தல் வேண்டும். சுறுசுறுப்பானவராக இருத்தல் வேண்டும். ஒரு நாளைக்கு குறைந்தது இரண்டு தரமாவது பாடசாலையைச் சுற்றி வந்து பாடசாலை நடவடிக்கைகளை மேற்பார்வை செய்பவராக இருக்க வேண்டும்.

தான் அதிபர் என்ற செருக்கின்றி ஆசிரியர் அனைவரையும் மதித்து நடக்க வேண்டும். பக்கச்சார்பின்றி சகல ஆசிரியர்களையும் சமமாக மதித்து அவர்கள் ஒரே குழுவாக பாடசாலை வளர்ச்சிக்காக செயற்பட வைக்க வேண்டும்.

ஆசிரியர்கள் ஒவ்வொருவரதும் குடும்பத்தில் நிகழும் இன்ப, துன்ப நிகழ்ச்சிகளில் அதிபர் கலந்து கொள்ள வேண்டும்.

ஆசிரியர்களின் தனிப்பட்ட விசேட திறன்களை இனங்கண்டு அத்துறையில் மாணவர்களின் வளர்ச்சிக்கான பொறுப்பை அவர்களிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

T.P என அழைக்கப்படும் T.பத்மநாதன் என்பவர் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் நூலகப் பொறுப்பாசிரியராக கடமையாற்றியவர். இவர் சிறந்த ஒரு உதைபந்தாட்ட வீரர். சிறந்த பயிற்றுவிப்பாளர். கல்லூரி அதிபர் திரு.தெ.து.ஜயரத்தினம் அவர்கள் உதைபந்தாட்ட வீரர்களை பயிற்றுவிக்கும் பொறுப்பை

இவரிடம் ஒப்படைத்தார். இவரது பயிற்றுவிப்பின் கீழ் 1960 - 1970 காலப்பகுதியில் யாழ் மாவட்ட உதைபந்தாட்டச் சங்கத்தால் நடாத்தப்பட்ட போட்டியில் தொடர்ந்து எட்டு வருடங்கள் மகாஜனக் கல்லூரியினர் வெற்றி வாகை சூடினர்.

இதேபோல தற்போது அருணோதயக்கல்லூரி அதிபர் திரு.நா.கேதீஸ்வரன் அவர்களும் விஞ்ஞானபாட ஆசிரியரான திரு.A.E.சுமந்திரன் அவர்களின் திறனை இனங்கண்டு மாணவரின் சதுரங்க வளர்ச்சிக்கான பொறுப்பை அவரிடம் ஒப்படைத்து இந்த வருடம் வலயமட்டத்தில் மூன்று அணிகளும் முதலிடம் பெற்றமை பாராட்டுக்குரியதாகும்.

அதிபரானவர் ஆசிரியர்களின் கல்வி முன்னேற்றத்திலும் அக்கறையுடையவராக இருந்து அவர்கள் உயர்கல்வித்தகைமை பெற ஊக்குவிக்க வேண்டும். பெற்றோருடன் நல்லுறவைப் பேண வேண்டும். பழைய மாணவர்கள் குறிப்பாக புலம்பெயர் பழைய மாணவர்களுடன் நல்லுறவைப் பேணி பாடசாலை வளர்ச்சிக்கான உதவிகளைப் பெற வேண்டும்.

கல்வித்திணைக்களத்துடன் அடிக்கடி தொடர்பு கொண்டு பாடசாலைக்கு தேவையான ஆசிரிய, கல்விசாரா ஊழியர் வளத்தையும், பௌதிக வளங்களையும் பெற முயற்சிக்க வேண்டும். நலன்விரும்பிகளையும், சர்வதேச நிறுவனங்களையும் தேடிச் சென்று பாடசாலைக்கு உதவிகளைப் பெற முயற்சிக்க வேண்டும்.

மாணவரின் பல்வேறு விசேட திறன்களை ஆசிரியர்களூடாக அறிந்து அவற்றை விருத்தி செய்ய முயற்சி எடுக்க வேண்டும். இவற்றில் மாணவர்கள் வெற்றியடையும் போது கல்லூரி பெருமையடையும், கல்லூரியின் புகழ் பரவும்.

உதாரணமாக, பணச்செலவு மிக அதிகமான கோலூன்றிப் பாய்தல் நிகழ்வுக்கு மாணவர்களை ஊக்கப்படுத்தி தேசிய மட்டத்தில் பல தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களை பெற்றதன் மூலம் இலங்கை முழுவதும் மட்டுமல்ல, சர்வதேசத்திலும் கல்லூரியின் புகழ் பரவியமை பாராட்டுக்குரிய ஒன்றாகும். 2009 தொடக்கம் 2013 வரை தொடர்ந்து ஐந்து வருடங்கள் அதிக தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களைப்

பெற்ற ஒரேயொரு தமிழ்ப் பாடசாலை என்ற சாதனை படைத்த பாடசாலை யா/அருணோதயக்கல்லூரி என்பது யாவரும் அறிந்ததே. அத்துடன் 2012ஆம் ஆண்டு ஆசிய மெய்வல்லுநர் கனிஷ்ட போட்டியில் இரு மாணவர்கள் பங்கு பற்றி தமது திறமையை வெளிக்காட்டியதுடன் ஒருவர் நாலாம் இடத்தையும் பெற்று கல்லூரிக்குப் பெருமை தேடித்தந்துள்ளார்கள். இப்படி பல வெற்றிகளைப் பெற்று பாடசாலைக்குப் பெருமை தேடித்தந்ததில் கல்லூரி அதிபர் திரு.நா.கேதீஸ்வரன் அவர்களின் பங்களிப்பும் முக்கியமானது என்றால் மிகையாகாது. அதிபரானவர் ஆசிரியர் களுடைய கருத்துக்களையும் கேட்டு அவற்றில் நல்ல கருத்துக் களை ஏற்று நடக்க வேண்டும்.

வெளியில் இருந்து ஆசிரியர்களுக்கு பிரச்சினை ஏதும் வரும் போது அதிபர் ஆசிரியர் பக்கம் நின்று அப்பிரச்சினைகள் இலகுவில் தீர்க்க முயற்சி எடுக்க வேண்டும்.

அதிபரானவர் தற்துணிவுடன் சில முயற்சிகளை எடுக்கக் கூடியவராக இருக்க வேண்டும். தந்தை தொடக்கி வைத்த சிறு பள்ளியை இலங்கையில் முதற்தர கல்லூரிகளில் ஒன்றாக வளர்த்தமைக்கு கல்லூரி அதிபர் தெ.து ஜயரத்தினம் அவர்கள் தற்துணிவுடன் எடுத்த சில முயற்சிகளுமே காரணமாக இருந்திருக்கலாம் என பலரும் கூறுவர்.

விஞ்ஞான, கணித பாடங்களுக்கான தனியார் கல்வி நிலையங்கள் நகர்ப்புறங்களில் மாத்திரம் நன்றாக இயங்கி வருதல் போன்ற பல்வேறு காரணிகளால் கிராமப்புற மாணவர்கள் நகர்ப்புற பாடசாலைகளை நோக்கிச் சென்ற இக்கால கட்டத்தில் அருணோதயக் கல்லூரி அதிபர் திரு.நா.கேதீஸ்வரன் அவர்கள் க.பொ.த (உ/த) கணித விஞ்ஞான வகுப்புக்களை இக்கல்லூரியில் தற்துணிவுடன் ஆரம்பித்து, பாடசாலையை 1AB பாடசாலையாக உயர்த்திய தையும் முதல் முறையிலேயே மாணவர் இருவர் பொறியியல் பீடத்திற்கு தெரிவு செய்யப்பட இருப்பதும் அவரது முயற்சி வெற்றியளித்துள்ளது என்பதையும் எடுத்துக்காட்டுகின்றது.

இவரது முயற்சிக்கு பக்கபலமாக நின்றவர்கள் :-

1. ஆசிரியர்கள் 2. மாணவர்கள்
3. பெற்றோர்கள் 4. கல்வித்திணைக்களம்
5. பழைய மாணவர்கள்

குறிப்பாக க.பொ.த சா/த பரீட்சையில் சித்தி பெற்று தொடர்ந்து இக்கல்லூரியில் க.பொ.த உ/த பிரிவில் கற்கும் மாணவர்களுக்கு புலம்பெயர் பழைய மாணவர்கள் ஊக்குவிப்பு வழங்கியமை.

கல்வித்திணைக்களம் தேவையான ஆசிரியர்களையும், ஆய்வுகூட உபகரணங்களையும் உடனடியாக வழங்கியமை.

மாணவர் சிறந்த பெறுபேற்றை பெற வைக்க வேண்டும் என்ற மன வைராக்கியத்துடன் ஆசிரியர்கள் கற்பித்தார்கள்.

இப்பாடசாலையில் கற்று நல்ல பெறுபேறுகளைப் பெறலாம் என்ற நம்பிக்கையுடன் மாணவர்கள் கற்றார்கள். பெற்றோரும் பாடசாலை மீது நம்பிக்கை வைத்தார்கள்.

**உ. ஆசிரியர்**

ஆசிரியர்களும் நல்லொழுக்கம் உடையவராகவும், கலாசார விழுமியங்களை பேணி நடப்பவர்களாகவும், மாணவரிடம் கலாசார விழுமியங்களை வளர்க்கக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

ஆசிரியர்கள் ஒரு தொழில் செய்யபவர்கள் என்ற நோக்கில் மட்டுமன்றி மாணவர்களுக்கு சிறந்த கல்வியை வழங்குவதன் மூலம் சமூக மாற்றங்களை ஏற்படுத்துபவர் என்ற நோக்கிலும் செயற்பட வேண்டும். ஆசிரியர் திறம்படக் கற்பிக்கவும் மாணவர் செம்மையுற கற்கவும் ஆசிரியர் மாணவர் உறவு முக்கியமானது. ஆசிரியர் மாணவரிடத்து அன்பு, மதிப்பு, நம்பிக்கை வைக்க வேண்டும்.

ஆசிரியர்கள் மன எழுச்சிகளுக்கு அடிமைப்பட்டு மாணவர்களை ஏசுதல், அடித்தல், இழிவு செய்தல் போன்றவற்றை செய்யக் கூடாது.

ஆசிரியர் தாம் கற்பிக்கும் மாணவர்களின் குடும்பப் பின்னணியை அறிந்திருக்க வேண்டும்.

மாணவரது குடும்பத்தில் நிகழும் இன்ப, துன்ப நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ள வேண்டும்.

மாணவர்கள் வெற்றி பெறும்போது அவர்களைப் பாராட்டுவதோடு, வெற்றியை நிதானமாக அனுபவிக்கவும் மாணவர்களுக்கு கற்றுக் கொடுக்க வேண்டும்.

தோல்விகளால் உளத்தாக்கமேற்படாது ஏற்றுக்கொள்ளவும் கற்றுக்கொடுக்க வேண்டும்.

மாணவர்கள் உடல் சோர்வோ, மனச்சோர்வோ அடையும் போது அவர்கள் நலம் பெற உதவ வேண்டும்.

ஒவ்வொரு மாணவரிடத்திலும் ஏதோவொரு திறமை மறைந்திருக்கும். ஆசிரியர்கள் மாணவருக்கு சமமான வாய்புக் கொடுத்து ஊக்குவித்தால் அவர்கள் திறன்கள் வெளிப்படும். இத்திறன்களை இனங்கண்டு அதிபர் உதவியுடன் இத்திறன்களை வளர்க்க ஆவன செய்ய வேண்டும்.

ஆசிரியர் தனியாள் வேறுபாடுகளை இனங்கண்டு அவரவர் மட்டத்திற்கு ஏற்ப தன்னையும் மாற்றிக் கற்பித்தலில் ஈடுபட வேண்டும்.

அறிவுத்திறன் குறைந்த மாணவர்களை மற்ற மாணவர் முன் தரக்குறைவாக நடாத்துதல் கூடாது. ஏனெனில் அவனிடம் வேறோர் விசேடதிறன் இருக்கலாம்.

திறமை இருந்தும் வறுமை காரணமாக கல்வியில் பின்தங்கும் மாணவர்களை இனங்கண்டு அதிபர் ஊடாக அம்மாணவர்களுக்கு உதவி செய்து ஊக்குவிக்க வேண்டும்.

மாணவர்களுக்கு பிரச்சினைகள் ஏற்படும் போது மாணவர்கள் அப்பிரச்சினைகளை குறுகிய வகையில் நோக்காதிருக்குமாறும் தம்மைப்பற்றி மாத்திரம் சிந்தித்து செயற்பட வேண்டாமெனவும் தமது பெற்றோர், தனது சமூகம், தமது இனம் ஆகியன மாத்திரமன்றி, முழு மனித வர்க்கம் பற்றியும் கவனம் செல்லுமாறும் ஆசிரியர் கற்றுக் கொடுக்க வேண்டும். இவற்றைச் சொற்களால் கூறிவிட்டால் மட்டும் போதாது. ஆசிரியர்களும் முன்மாதிரியாக நடந்து கொள்ளல் வேண்டும்.

ஆசிரியர்கள் சுயகற்றலுக்கு மாணவர்களை வழிப்படுத்த வேண்டும்.

பொருத்தமான கற்றல் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

இவ்வாசிரியரிடம் கற்பதன் மூலம் தாங்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெறுவோம் என்ற நம்பிக்கையை மாணவருக்கு ஏற்படுத்துதல் வேண்டும்.

அதிபர், மற்றும் சக ஆசிரியர்களுடன் நல்லுறவைப் பேண வேண்டும்.

பாடசாலையில் நடைபெறும் சகல வைபவங்களிலும் ஆசிரியர்கள் அனைவரும் முழு மனத்துடன் பங்கு கொள்ள வேண்டும்.

ஆரம்பப்பிரிவு ஆசிரியர்கள் குறிப்பாக, மாணவர்களது எழுத்து, வாசிப்புத்திறன் வளர்ச்சியில் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

ஆசிரியர் ஒவ்வொருவரும் தாங்களும் தொடர்ந்து கற்று தங்களது கல்வித் தகைமையையும் வளர்த்துக் கொண்டிருக்க வேண்டும்.

தவிர்க்க முடியாத அத்தியாவசியமான தேவைகளுக்கு மாத்திரம் லீவு எடுப்பவராக இருக்க வேண்டும்.

பாடசாலை தொடங்குவதற்கு முன் பாடசாலைக்கு வரவேண்டும்.

முன்னைய காலங்களில் ஆசிரியர்களுக்கு சமூகத்தில் தனியான மதிப்பு இருந்தது. இதற்குக் காரணம்

(1) மாணவர்கள் கற்றலுக்கு ஆசிரியர்களில் மாத்திரம் தங்கியிருந்தார்கள்.

(2) ஆசிரியர்கள் கற்பித்தலிலும் சமூகத்தில் சில தேவைகளைப் பூர்த்தி செய்யவதிலும் ஈடுபட்டார்கள்.

உதாரணமாக, ஆசிரியர் வல்லிபுரம் என்பவர் இலவச நில அளவையாளராக தொழிற்பட்டு பல காணிகளை அளந்து கொடுத்ததோடு, பல காணிப்பிரச்சினைகளையும் தீர்த்து வைத்துள்ளார்.

இப்பாடசாலை அதிபரின் தந்தையாரான ஆசிரியர் பண்டிதர் நாகலிங்கம் என்பவரும் இலவச நில அளவையாளராகத் தொழிற்பட்டு பல காணிகளை அளந்து கொடுத்ததோடு, பல காணிப்பிரச்சினைகளையும் தீர்த்து வைத்துள்ளார். அத்துடன் இவர் பல குடும்பப் பிரச்சினைகளையும் தீர்த்து வைத்துள்ளார். மக்கள் தங்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இவர்களுடைய வீடு தேடிச் சென்றார்கள்.

பண்டிதர் நாகலிங்கம் அவர்கள் அளவெட்டி மல்லாகம் பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் மற்றும் பல பொது ஸ்தாபனங்களில் தலைவராக இருந்தும், சமுதாயத்திற்கு சேவையாற்றினார். இதனால் மக்கள் மத்தியில் இவருக்கு பெரும் மதிப்பு இருந்தது.

தற்போது பல்வேறு காரணங்களால் ஆசிரியர்களின் மதிப்பு குறைந்து காணப்படுகிறது.

### 3. பெற்றோர்கள்

பெற்றோர்கள் பிள்ளைகளின் கல்வியில் கூடிய கவனம் எடுக்க வேண்டும். மாதமொரு முறையாவது பாடசாலைக்கு வந்து பிள்ளைகளின் முன்னேற்றம் பற்றி ஆசிரியர்களுடன் கலந்து ரையாடி முன்னேற்றத்திற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டும்.

இணைப்பாடவிதான செயற்பாடுகளில் ஈடுபடுவதால் கல்வியில் பாதிப்பு ஏற்படாது என்பதை அறிந்து இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் ஈடுபட பிள்ளைகளை ஊக்கப்படுத்த வேண்டும். அன்பு பாசத்துள் பிள்ளைகளை அரவணைத்து அவர்களுக்கு சுதந்திரம் கொடுத்து நாளாந்தம் அவர்கள் செயற்பாடுகளையும் கண்காணிக்க வேண்டும்.

கலாசார விழுமியங்களை பெற்றோர் பேணுவதோடு பிள்ளைகளுக்கும் எடுத்துக்கூற வேண்டும். பிள்ளைகளை மற்றவர்களுடன் ஒப்பிட்டு குறைகூறக் கூடாது.

தாய் தந்தையர்கள் தம் மன வேற்றுமைகளை பிள்ளைகள் முன் காட்டாது ஒழுகுதல் வேண்டும். பிள்ளைகளின் கற்றலுக்கான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

பிள்ளைகள் படிக்கும் போது பெற்றோர் தொலைக்காட்சி பார்த்தலைத் தவிர்த்துக் கொள்ளல் வேண்டும்.

### 4. மாணவர்கள்

1) மாணவர்கள் அனைவரும் பாடசாலைப் பற்றுடையவராக இருக்க வேண்டும்.
2) நல்லொழுக்கம் உடையவராகவும், கலாசார விழுமியங்களை கடைப்பிடிப்பவராகவும் இருக்க வேண்டும்.
3) அதிபர், ஆசிரியர், பெற்றோர், பெரியோர்களை மதித்து நடக்க வேண்டும்.
4) தாங்கள் இக்கல்லூரியில் கற்று உயர் பெறுபேறுகளைப் பெற முடியும் என்ற நம்பிக்கையுடனும், உயர் பெறுபேறுகளைப் பெற்று, உயர்நிலை அடைந்து சமூகத்திற்குத் தொண்டாற்ற வேண்டும் என்ற மன உறுதியுடையவராக இருக்க வேண்டும்.
5) கல்வியில் மாத்திரமன்றி, இணைப்பாடவிதான செயற் பாடுகளிலும் விருப்புடன் ஈடுபட்டு வெற்றிகளைப் பெற்று கல்லூரிக்கு பெருமை தேடித்தர வேண்டும்.

உதாரணமாக, கோலூன்றிப் பாய்தல் நிகழ்வில் பங்கு பற்றிய மாணவர்கள் கல்வியில் மாத்திரமன்றி தேசியமட்டத்தில் வெற்றி பெற்று பல பதக்கங்களைப் பெற்றதன் மூலம் பாடசாலைக்கு பெருமை தேடித்தந்ததோடு பல வேலைவாய்ப்பையும் பெற்று உயர் நிலையிலும் இருக்கிறார்கள்.

**பொதுப்பரீட்சைகளில் வெற்றி பெற மாணவர்கள் செய்ய வேண்டியது:-**

1) கற்கும் போது ஆசிரியர் கற்பிப்பதை அவதானமாகக் கேட்டுக் கற்க வேண்டும்.
2) படிப்பது விளங்காவிடின், ஆசிரியரிடம் மீண்டும் கேட்டு விளங்கிக் கொள்ள வேண்டும்.
3) அன்று கற்ற பாடங்களை அன்றே வீட்டில் மீளப்படிக்க வேண்டும்.
4) படிக்கும் போது கவனத்தை திசை திருப்பாது படிக்க வேண்டும்.
5) நேரசூசி போட்டு அதன்படி படிக்க வேண்டும்.
6) தேவையற்ற வீணான தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்ப்பதைத் தவிர்க்க வேண்டும்.
7) கையடக்கத் தொலைபேசிப் பாவனையை கூடியளவு தவிர்த்தல்.
8) படிக்கும் போது சிறுகுறிப்பெழுதிப் படிக்க வேண்டும்.
9) கடந்த கால வினாப்பத்திரங்களைச் செய்து பார்க்க வேண்டும்.
10) வினாக்களுக்கு குறிப்பிடப்பட்ட நேரத்தில் விடையெழுதிப் பழகவேண்டும்
11) தூக்கத்தில் படிக்காதீர்கள் அதிகாலையில் விழித்தெழுந்து படியுங்கள்
12) பரீட்சைக்காலம் வரை பார்த்திராது எந்நேரத்திலும் தயாராக இருத்தல் வேண்டும்.

இணைப்பாடவிதான செயற்பாடுகளில் வெற்றி பெற மாணவர் தொடர்ந்து பயிற்சிகளில் ஈடுபட வேண்டும்.

**5. கல்விசாரா ஊழியர்கள்**

ஒரு பாடசாலையின் வளர்ச்சியில் கல்விசாரா ஊழியர்களின் பங்களிப்பு முக்கியமானது. கல்லூரியின் நாளாந்த செயற்பாடுகள் சிறந்த முறையில் நடைபெற இவர்கள் பங்களிப்பு முக்கியமானதாகும். பாடசாலை பௌதிக வளங்களையும்,

சொத்துக்களையும் பேணிப்பாதுகாப்பதில் இவர்கள் பங்களிப்பு மிக முக்கியமானது.

## 6. பழைய மாணவர்கள்

இன்றைய காலகட்டத்தில் ஒரு கல்லூரியின் வளர்ச்சியில் பழைய மாணவர்களின் பங்களிப்பு மிக முக்கியமானது ஆகும். ஏனெனில் பௌதிக வளங்களுக்காக (கல்வி அமைச்சு) கல்வித்திணைக்களத்தில் இருந்து பெறப்படும் நிதி மிகக் குறைவே. பல பாடசாலைகளில் பௌதிகவளம் மற்றும் கல்விசாரா ஊழியர்களின் பற்றாக்குறை இன்றும் நிலவுகிறது. எனவே தேவையான பௌதிக வளங்களைப் பெறுவதற்கும், ஆளணி பற்றாக்குறையைப் போக்குவதற்கும் பழைய மாணவர்களின் குறிப்பாக புலம்பெயர் பழைய மாணவர்களின் நிதியுதவியை பாடசாலைகள் எதிர்பார்த்து நிற்கின்றன. பல பாடசாலைகளின் பழைய மாணவர்களும் பெருந்தொகைப் பணத்தை வழங்கி வருகின்றனர்.

மாணவர்களின் நலன் நோன்பிற்கும், கல்வி ஊக்குவிற்புக்கும் பண உதவி செய்து வருகின்றனர்.

மாணவர்களின் கணனி தொழில்நுட்ப அறிவை வளர்ப்பதற்கு, கணனி ஆய்வுகூடம் அமைப்பதற்கும், பெருந்தொகை கணனிகளை கொள்வனவு செய்வதற்கும் பண உதவி புரிந்து வருகின்றனர்.

இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்காக பெருமளவு பணத்தையும் வழங்கி வருகின்றனர்.

சிறிய வசதி குறைந்த யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கும், வன்னிப் பெருநிலப்பரப்பு பாடசாலைகளுக்கு இவ்வாறான உதவி இல்லாதபடியால் அப்பாடசாலைகள் தமது கல்வி, பௌதிகவளம் மற்றும் இணைப்பாடவிதான வளர்ச்சிக்கு அரசையே நம்பியிருக்க வேண்டியுள்ளது.

பெரும்பாலான பழைய மாணவர்கள் பாடசாலையின் வளர்ச்சி கருதி செயற்படுகின்ற போதிலும் ஒரு சிலர் தனிப்பட்ட முறையில் அதிபருடன் ஏற்படும் கருத்து வேற்றுமை காரணமாக

பாடசாலையின் வளர்ச்சிக்கு பாதகமான முறையில் செயற்படுவது வருந்தத்தக்கது.

**7. நலன்விரும்பிகள்**

ஒரு குறிப்பிட்ட பாடசாலையின் பெற்றோரோ அல்லது பழைய மாணவர்களோ அல்லாத ஒரு சிலர் கல்லூரியின் தேவைகளுக்காக பண உதவியோ அல்லது பொருள் உதவியோ செய்து பாடசாலையின் வளர்ச்சியில் பங்கு கொள்கிறார்கள். சிலர் தாமாகவே பாடசாலையுடன் தொடர்பு கொண்டு அன்பளிப்புச் செய்கிறார்கள். சிலரிடம் அதிபரோ அல்லது பிரதி அதிபரோ சென்று உதவியை கேட்டுப் பெற்றுக்கொள்கிறார்கள்.

**8. சமூகம்**

பாடசாலைச் சூழலில் உள்ள மக்கள் பாடசாலையில் நடைபெறும் பரிசளிப்பு விழா, மெய்வல்லுநர் போட்டி, தமிழ்த்தின விழா போன்ற பல வைபவங்களுக்கு உதவி செய்வதுடன் வெற்றி வீரர்கள் கௌரவிப்பு நிகழ்வுகளுக்கும் உதவி செய்து பாடசாலையின் வளர்ச்சியில் பங்கு கொள்கிறார்கள். கல்விச் சமூகம் சமுதாயப் பணிகளில் மாணவர்களை ஈடுபடச் செய்வதன் மூலம் மாணவர்களின் மனப்பாங்கை வளர்க்கலாம்.

**9. கல்வி அமைச்சு - கல்வித்திணைக்களம்**

கல்வி அமைச்சு கல்வித்திணைக்களங்கள் ஊடாக ஆளணியினர் அனைவருக்குமான சம்பளத்தையும் வழங்கி வருவதுடன் இயலுமானவரை பாடசாலைகளுக்கு தேவையான ஆளணியினரையும் பௌதிக வளங்களையும் வழங்கி வருகின்றன. சம்பளம் தவிர ஏனைய வசதிகள் தங்களுக்கு கிடைப்பது குறைவு என்றும் வசதி குறைந்த சிறிய பாடசாலைகள் குறை கூறுவதை பத்திரிகைகள் வாயிலாக அறிய முடிகிறது. போர் முடிந்து ஐந்து வருடங்கள் முடிவடைந்த போதிலும் பெரும்பாலான பாடசாலை களில் ஆசிரியர் பற்றாக்குறையும் பௌதிகவள பற்றாக்குறையும்

காணப்படுகிறது. குறிப்பாக கணித விஞ்ஞான ஆங்கில பாடங்களுக்கு பல பாடசாலைகளில் ஆசிரியர்கள் இல்லை எனக் கூறப்படுகிறது. யாழ் மாவட்டத்தில் இருந்து இரண்டு வருட ஒப்பந்த அடிப்படையில் வன்னிக்கு அனுப்பப்பட்ட நிலையிலும் பயிற்சிக் கல்லூரிகளிலிருந்து வெளியேறும் புதிய ஆசிரிய நியமனங்கள் வழங்கப்பட்ட போதும் தொடர்ந்து யாழ் மாவட்டத்தில் இருந்து தகுதியான ஆசிரியர்களை வன்னி பெருநிலப்பரப்புக்கு அனுப்பி அங்குள்ள பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு உதவ வேண்டும். குறிப்பாக A-9 பாதையில் உள்ள பாடசாலைகள் தவிர கிராமப்புற பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறையும் பௌதிகவள பற்றாக்குறையும் அதில் காணப்படுகின்றன. அங்குள்ள பெரும்பாலான மக்கள் சிறு கொட்டில்களில் வாழும் வறிய மக்கள் என்ற நிலையில் பழைய மாணவர்களின் உதவிகளும் இல்லாத நிலையிலும் அப் பாடசாலைகளை வளர்ப்பதற்கு முழுப்பொறுப்பையும் கல்வித் திணைக்களமே பொறுப்பேற்க வேண்டும்.

**10. ஆசிரிய சங்கங்கள்**

ஆசிரியர்களின் நன்மை கருதி ஆரம்பிக்கப்பட்ட இச்சங்க ங்கள் ஆசிரியர்களின் தகுதிக்கேற்ற பதவி உயர்வுகள் இட மாற்றங்கள் போன்றவற்றுக்காகவும் தனிப்பட்ட முறையில் ஆசிரியர் களுக்கு ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகவும் பாடு படுகின்றன. ஆசிரியர்களின் நலன் பேணப்பட்டால் கற்பித்தல் செயற்பாடு நன்றாக அமையும். எனவே கல்வி வளர்ச்சியில் ஆசிரியர் சங்கங்களுக்கும் பங்குண்டு. அதே நேரத்தில் ஆசிரிய இடமாற்றம் போன்ற விடயங்களில் வெவ்வேறு ஆசிரிய சங்கங்கள் வெவ்வேறு கொள்கையுடன் செயற்படுவதால் கல்வித்திணைக்கள இடமாற்றங்கள உரிய நேரத்தில் செய்வதில் தாமதமாகிறது. இதனால் கல்வி வளர்ச்சி பாதிக்கப்படுகிறது.

## 11. அரசியல்வாதிகள்

பாராளுமன்ற உறுப்பினர்கள் பன்முகவரவு செலவுத் திட்டத்தில் தமக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் ஒரு பகுதியை பாடசாலைகளுக்கு வழங்கி பாடசாலையின் வளர்ச்சிக்கு உதவுகின்றனர். இவர்களும் வசதி குறைந்த யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கும், வன்னிப் பெருநிலப்பரப்பு கிராமப்புற பாடசாலைகளுக்கும் வழங்குவது சிறந்ததாகும். பண உதவி செய்கின்ற அதே நேரத்தில் அரசியல்வாதிகள் பாடசாலையின் ஆளனி நியமனம், இடமாற்றங்கள், அதிபர் நியனம் போன்றவற்றிலும் தலையிடுவதால் திணைக்களம் இவற்றை உரிய முறையில் செய்ய முடியாதுள்ளது. ஒரு பாடசாலைக்கு ஒரு நேரத்தில் இரு அதிபர்கள் நியமிக்க முயற்சிக்கும் சந்தர்ப்பங்களும், நியமனம் தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்குகள் நடைபெறுவதும் பாடசாலை வளர்ச்சியில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்.

பாடசாலையின் வளர்ச்சியில் பங்குகொள்ளும் பல காரணிகள் கூறப்பட்டாலும் மாணவரின் மனப்பாங்கு வளர்ச்சியில் 1. அதிபர் 2. ஆசிரியர் 3. பெற்றோர் 4. கல்விச்சமூகம் ஆகியோர் கூடிய பங்கு வகிக்கின்றனர். தற்போதைய காலகட்டத்தில் மாணவர்களில் மனப்பாங்கு வளர்க்கப்படுவது கட்டாய தேவையாக உள்ளதால், மனப்பாங்கை வளர்ப்பதற்கான செயற்பாடுகளுக்கு முன்னுரிமை கொடுத்து அதற்கான செயற்பாடுகளில் ஈடுபட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

மேற்கூறப்பட்ட பல காரணிகளில் பல நாட்டில் உள்ள குறிப்பிட்ட சில பாடசாலைகளுக்கு சாதகமாக அமைவதால் அவை வளர்ச்சி அடைந்து வருகின்றன. அந்தவகையில் மேற்குறிப்பிட்ட காரணிகளில் பல அளவெட்டி அருணோதயக் கல்லூரிக்கும் சாதகமாக இருப்பதால் குறுகிய காலத்தில் இக்கல்லூரி பெருவளர்ச்சி கண்டிருக்கிறது என்பதை மறுக்க முடியாது.

அதிபர் திரு.நா கேதீஸ்வரன் அவர்கள் இன்னும் பல காலம் இக்கல்லூரியில் அதிபராக இருக்கக்கூடிய சந்தர்ப்பம் உள்ளபடியால் இவர் காலத்தில் இக்கல்லூரி மேலும் பெருவளர்ச்சி அடைந்து நாட்டின் முதற்தர கல்லூரிகளில் ஒன்றாக புகழ்பரப்ப வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

ஒவ்வொரு பாடசாலைக்கும் குறிப்பிட்ட ஒரு அதிபரின் காலம் பாடசாலையின் பொற்காலம் எனக் கூறுவர். மகாஜன சிற்பி தெ.து ஜயரத்தினம் அவர்கள் காலம் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் பொற்காலம் எனவும், ஒறேற்றர் சி.சுப்பிரமணியம் அவர்களின் காலம் கந்தரோடை ஸ்கந்தவரோதயக்கல்லூரியின் பொற்காலம் எனவும், அதிபர் பூரணம்பிள்ளையின் காலம் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் பொற்காலம் என்றும் கூறுவர். அந்தவகையில் அதிபர் திரு.நா.கேதீஸ்வரன் காலம் அளவெட்டி அருணோதயக்கல்லூரியின் பொற்காலம் எனக் கூறலாம் என நினைக்கிறேன். கூறுவார்கள் என நம்புகிறேன்.

இறுதியாக என் அன்பார்ந்த மாணவச் செல்வங்களே நீங்கள் பரீட்சைகளில் உயர் பெறுபேறுகளையும், இணைப்பாடவிதான செயற்பாடுகளில் பல வெற்றிகளையும் பெற்று உயர் பதவிகளைப் பெறுவதோடு மனப்பாங்கு வளர்ச்சியுடன் சமூகத்திற்கு நற்சேவை செய்பவராகவும் வருவீர்கள் என்ற நம்பிக்கையுடன் உங்களை வாழ்த்தி எனது உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி.